Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 30 | 13-04-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 54

N.E.C

யாழ் சாலை, கிளிநொச்சி.

A/L 2005 ற்கான புதிய பிரிவு வகுப்புக்கள் 12.04.2003 சனி 09.00 கலை, வர்த்தகப் பிரிவும், 11.00 கணித, விஞ்ஞானப்பிரிவும் ஆரம்பமாகியுள்ளன. (சி-8061) - நிர்வாகி

வாஷிங்டன் மாநாட்டு புறக்கணிப்பால்

# டோக்கியோ உதவி வழங்குவோர் மாநாட்டை விடுதலைப்புலிகள் பகிஷ்கரிக்க நேரலாம்

## புலிகளின் தலைமைச் செயலகம் அறிவிப்பு

**ஜப்பானில் எதிர்வரும் யூன் மாதம் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு தம்மால் பகிஷ்கரிக்கப்பட க்கூடும் என விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்னோடியாக வாஷிங்டனில் நடைபெறவுள்ள முக்கியம் வாய்ந்த மாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே டோக்கியோவில் நடைபெறவுள்ள மாநாட்டில் தமது பங்களிப்பை மறுபரிசீலனை செய்யப்போவதாக விடுதலைப் புலிகள் கூறியுள்ளனர்.

சிறிலங்கா அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைந்து செயலாற்றவேண்டும் என்றும் சர்வதேசநாடுகளை இருதரப்பும் இணைந்தே அணுக வேண்டும் என்றும் பேச்சுவார்த்தைகளில் எடுக்கப்பட்ட உறுதிமொழி கடைப்பிடிக்கப்படவில்லை.

வாஷிங்டன் மாநாட்டில் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தனி

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பான் மாநாட்டின் முன் கொழும்பிலும் மாநாடு

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் கொழும்புக்குவரவுள்ளனர்.

ஜப்பானில் நடைபெறவிருக்கும் மாநாட்டுக்கு முன்னோடியாக அடுத்த மாதம் ஆறாம்திகதி கொழும்பில் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்வதற்காகவே இவர்கள் கொழும்புவரவுள்ளனர்.

இலங்கையின் நிலைமை குறித்து ஆராயும் இவர்கள் யூன் மாதம் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் சிபாரிசுகளை செய்வார்கள்.

டோக்கியோ மாநாட்டில்

## 30,000 கோடி ரூபா உதவி சிறிலங்காவால் கோரப்படுமாம்!

(வாஷிங்டன்)

டோக்கியோவில் நடைபெறவுள்ள உதவிவழங்கும் மாநாட்டில் இலங்கைக்கு 300 கோடி அமெரிக்க டொலர்கள் (30,000 கோடி ரூபா) உதவி கோரப்படும் என மத்திய வங்கி ஆளுனர் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வருடாந்தம் பெற்றுக்கொள்ளும் வருமானத்தில் இது 20 மடங்கு அதிகமானது என அவர் மேலும் கூறியுள்ளார். ஐந்து வருடகாலத்தில் மிகக்குறைந்த வட்டியான ஐந்து சதவீத வட்டியுடன் இத்தொகை திருப்பிச் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். 12 வருட காலத்தில் குறைந்த வட்டிவிகிதத்தில் பெற்றுக்கொள்ளப்படும் நீண்டகால கடன் தொகை இதுவாகும் என கூறியுள்

(08ஆம் பக்கம் பார்க்க)

## புதுவருடப் பிறப்பு

சுபானு வருடம் வாக்கிய பஞ்சாங்கப்படி நாளை முற்பகல் 9.52 மணிக்கு பிறக்கிறது. அதிகாலை 5.53 தொடக்கம் பிற்பகல் 1.52வரை விஷு புண்ணிய காலமாகும் நாளை பகல் 2.22 தொடக்கம் 4.10 வரையும் நாளை மறுதினம் பகல் 2.39 தொடக்கம் 4.12 வரையும் கைவிசேஷம் வழங்கும் நேரமாகும்.

## பாதிக்கப்படவில்லை

இலங்கையில் இதுவரை யாரும் சார்ஸ் நிமோனியா நோயினால் பீடிக்கப்பட்டதாகக் கண்டுபிடிக்கப்படவில்லையென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## புலிகள்–அரசாங்கப் பிரதிநிதிகள் 24ஆம் திகதி வவுணதீவில் சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா படைத்துறை அமைச்சின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளது. யுத்த சூனியப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் வவுணதீவு பிரதேச செயலகத்தில் 24ஆம் திகதி காலை 10.00 மணிக்கு சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

மூத்ததளபதி கேணல் கருணா, படைத்துறை அமைச்சின் செயலா

(08ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை முடிவுகள் மீள் சரிபார்த்தல்!

அண்மையில் வெளியான க.பொ.த சாதாரணப் பரீட்சைகளின் முடிவுகளை மீள் சரிபார்க்க விரும்புவோர் அடுத்த மாத 12 ஆம் திகதிக்கு முன்னர் அதற்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு பரீட்சைத் திணைக்களம் கூறியுள்ளது.

## சமாதான முயற்சிகள் மூலம் இலங்கை பல வெற்றிகளை ஈட்டியது

நோர்வே தூதரகப் பிரதிநிதி

(கொழும்பு)

இலங்கை சமாதான முயற்சிகள் மூலம் பல வெற்றிகளை ஈட்டியுள்ளது என்று நோர்வே தூதரகத்தின் பிரதிநிதி ஒவ்பார்லி தெரிவித்துள்ளார்.

எனினும் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு இலங்கை பல தடைகளைத் தாண்டவேண்டியுள்ளது. இவ்வாறு நோர்வே பிரதிநிதி மத்திய மாகாணத்தில் ஊடகவியலாளர் கருத்தரங்கில் உரையாற்றுகையில் கூறியுள்ளார். சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு உதவுமாறு சனாதிபதியே நோர்வே அரசாங்கத்திடம் கோரியுள்ளார் என்றும், பிரதமமந்திரி பதவிக்கு வந்ததும் தொடர்ந்து நோர்வே அரசின் உதவிகளைப் பெற்று சிரமத்துடன் சமாதானத்தை முன்

(08ஆம் பக்கம் பார்க்க)

## தென்னாபிரிக்க அனுபவத்தை தீர்விற்கு பின்பற்றமுடியும்!

அமைச்சர் பேராசிரியர் பீரிஸ்

தென்னாபிரிக்காவின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்ட அனுபவத்தை இலங்கையும் பின்பற்ற முடியும் என்று சிறிலங்காவின் அரசியல் விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை, வடமராட்சி கடற்பரப்பில் மீனவர் மீது கடற்படை மிரட்டல்

முல்லைத்தீவு மற்றும் வடமராட்சி கிழக்குக் கரையோரப் பகுதிகளில் அடிக்கடி டோராப் படகுகளில் ரோந்து செல்லும் சிறிலங்கா கடற்படையினர் மீனவர்களை அச்சுறுத்தி வருகின்றனர். இதனால் இப்பிரதேச கடற்தொழிலாளர்கள் தொழில் செய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் கரைக்கு அண்மையாக ஒரு கிலோ மீற்றர் தூரம்வரை இவ் டோராப் படகுகள் வருவதால் மீனவர்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடந்தவாரம் கடற்படையினர் மீனவர்களின் வள்ளங்கள் சிலவற்றை மறித்து சோதனையிட்டதுடன் மீனவர்களைத் துப்பாக்கி முனையில் மிரட்டியுள்ளனர். (ஆ.11)




நேற்று முன்தினம் நடைபெற்ற இசை, நடன, நாடக விழாவில் இடம்பெற்ற கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வில் புதுவை இரத்தினதுரை உரையாற்றுகிறார்

# வேகக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் தமிழீழக் காவல்துறையினர்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்கு வரத்துப் பிரிவினர் தற்போது வேகக் கட்டுப்பாட்டு நடவடிக்கை உட்பட பல்வேறு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாக ஏ-9 நெடுஞ் சாலையில் காவல்துறையினர் தினமும் மேற்படி நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

ஏ-9 நெடுஞ் சாலையில் தொடர்ந்து வீதி விபத்துக்கள் ஏற்பட்டு வருவதனையடுத்து மேற்படி நடவடிக்கையினை தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

அதி வேகமாகச் செல்லும் வாகனங்கள், மிதி பலகையில் பிரயாணம் செய்தல், வீதியில் மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பொருட்களை வாகனங்களில் ஏற்றிச் செல்லல், வீதி நடைமுறைகளை கடைப் பிடிக்க தவறுபவர்கள் மீது அந்தந்த இடத்தில் தடுத்து நிறுத்தி தண்டப்பணம் அறவிடப்பட்டு வருவதுடன், நீதிமன்றிலும் முற்படுத்தப்பட்டு வருகின்றனர். (சோ)

## ஆறு விவசாய போதனாசிரியர்கள் கிளி. மாவட்டத்திற்கு புதிதாக நியமனம்

### - 6வருடங்களின் பின் நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கடந்த 6 வருடங்களின் பின் கிளிநொச்சி மாவட்ட விவசாயப் போதனாசிரியர்களின் வெற்றிடம் வடக்கு கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் மற்றும் செயலாளர் ஆகியோரின் முயற்சியால் நிரப்பப்பட்டுள்ளது

மாவட்டத்திற்கு மொத்தம் 16 பேர் தேவை. 7பேர் மாத்திரம் இதுவரை கடமையாற்றியிருந்தனர். புதிதாக 6 பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

புதிதாக நியமனம் பெற்றவர்களின் பெயர் விபரம் பின்வருமாறு
செல்வி. பாலசுந்தரம் யாழினி
செல்வி. செல்லத்துரை அருந்ததி
செல்வி. கௌஸ்துபமணி துஷ்யந்தி
செல்வன். மாயன் விஜிந்தன்
செல்வி. இராசநாயகம் கேமா
செல்வி. சிவபாலன் மாலினி

இவர்கள் மாவட்டத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட்டு சேவையாற்றுவார்கள்.

இம்மாவட்ட விவசாயிகளின் தொழில்நுட்பப் பிரச்சினைகளை சிறந்தமுறையில் அணுகி மாவட்ட விவசாய உற்பத்திக்கு பங்காற்றுவார்கள் என கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் எதிர்பார்க்கின்றார். (அ)

## பொதுக்கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கிருஸ்ணர் ஆலய பொதுக்கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் அன்றைய தினம் பி.ப 2.00 மணிக்கு ஆலய முன்றலில் மேற்படி கூட்டம் நடைபெறவுள்ளதெனவும் சகல பொது மக்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் ஆலய நிர்வாக சபைத் தலைவர் சு.பசுபதிப் பிள்ளைவேண்டியுள்ளார். (சோ)

## -இல. சமாதானப் பேச்சுக்களை- மாலைதீவில் நடத்துவதற்கு அந்நாட்டு அரசாங்கம் விருப்பம்

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஒரு கட்டத்தை மாலைதீவில் நடத்த அந்நாட்டு அரசாங்கம் விருப்பம் வெளியிட்டுள்ளது.

இதற்கான வேண்டுகோளை சிறிலங்கா அரசாங்கத்திடம் மாலைதீவு அரசாங்கம் விடுத்திருக்கின்றது.

இது குறித்து சிறிலங்கா அரசாங்கம் முடிவு எதனையும் அறிவிக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை மாலைதீவு சனாதிபதி அப்துல் ஹையூம் அடுத்த மாதம் ஆறாம் திகதி சிறிலங்காவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கொழும்பில் இரண்டு நாட்கள் தங்கியிருக்கவுள்ள இவர், சிறிலங்கா சனாதிபதி மற்றும் பிரதம மந்திரி ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

## நாளை வருகைதரவும்

(அலுவலக செய்தியாளர்)

சித்திரை வருடப்பிறப்பன்று வன்னிமாவட்ட விளையாட்டு அபி விருத்திச் சங்கத்தினரால் நடாத்தப்படவுள்ள மாபெரும் வீதி ஓட்டப்போட்டி நாளை காலை 6.00 மணிக்கு மாங்குளத்தில் ஆரம்பமாகி கிளி. மத்திய விளையாட்டு மைதானத்தை வந்தடையவுள்ளது.

இப்போட்டிக்கு பதிவுசெய்த கிளி. மாவட்ட போட்டியாளர்கள் கிளி. மத்திய விளையாட்டு மைதானத்திற்கும், முல்லை மாவட்ட போட்டியாளர்கள் மாங்குளம் சந்திக்கும் நாளை காலை 5.30 மணிக்கு முன்னதாக வருகை தரும்படியும் இப்போட்டிக்கு பதிவு மேற்கொள்ளாதோர் போட்டி ஆரம்பமாகுமிடத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாமெனவும் வன்னிமாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப் பாளர் ராஜா தெரிவித்துள்ளார். (சோ)


## துயர் பகிர்கின்றோம்

### திருமதி கணேஸ்ஐயர் கோமதிஅம்மா

மல்லாவி முருகன் ஆலய பிரதம குருக்கள் திரு. கணேசபூரணக் குருக்களின் அன்புத்தாயார் திருமதி கணேஸ்ஐயர் கோமதிஅம்மா அவர்கள் 08-04-2003 அன்று செவ்வாய்க் கிழமை இறைபதம் எய்தியுள்ள துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் எமது ஆழ்ந்த துயரினையும் பகிர்ந்து கொள்கின்றோம்.

*அருள்மிகு யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலய பரிபாலன சபையினர், மல்லாவி, யோகபுரம்*

முத்துப்பிள்ளையார் வண்ணாச்சோலை, மல்லாவி.

(3079)

## மரண அறிவித்தல்

### திருமதி வீரலட்சுமி கணபதிப்பிள்ளை

ஆறுகால் மடத்தை பிறப்பிடமாகவும் தற்போது இந்தியா கும்மிடிப் பூண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வீரலட்சுமி கணபதிப் பிள்ளை 04-04-2003 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கணபதிப்பிள்ளையின் (பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியாவார். இவரது இறுதிக்கிரியைகள் 13-04-2003 ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெறும். இன்று ஆறுகால்மடம் பாடசாலை வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

*பாடசாலை வீதி. ஆறுகால்மடம். ஆனைக்கோட்டை.*

தகவல்: இ. முத்துலிங்கம், (சகோதரன்)

(3081)



## வரிவிளம்பரம்

### உயர்கல்வி நிறுவனம் வட்டக்கச்சி

A/L 2004, 2005 இற்கான கலை, வர்த்தக வகுப்புக்கள் ஆரம்பம் 14-04.2003 பி.ப. 4மணி (திங்கள்) குறிப்பு: கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் பெயர்களைப் பதிவு செய்யவும். சி.பவானந்தன் நிர்வாகி. (3078)

### அறிவுடைமை கல்வி நிலையம் கிளிநொச்சி

2003 கலைப்பிரிவு மாணவர்களுக்கான தமிழ் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு 13.04. 2003 (ஞாயிறு காலை 9மணிக்கு ஆசிரியர் திரு S. கணேசலிங்கம் B.A.Hons அவர்களால் தொடர்ச்சியாக நடாத்தப்படும் .சி.பவானந்தன் நிர்வாகி. (3076)

### 2005 கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.

16.04.2003 காலை 9.00 மணி கலை, வர்த்தகம், விஞ்ஞானம், G.A.Q புவியியல், சூழலியல், தமிழ் தரம்- 3,4,11 மீட்டல் ஆரம்பமாகும் இடங்கள்.அமுதன் கல்வி நிலையம், புதுக்குடியிருப்பு சயன்ஸ் கோல் புதுக்குடியிருப்பு. (2837)

### அறிவுடைமை கல்வி நிலையம் கிளிநொச்சி

A/L 2004,2005ஆம் ஆண்டிற்கான, கணித, விஞ்ஞான, கலை, வர்த்தக புதிய பிரிவு வகுப்புக்கள் ஆரம்பம். 14-04-2003 பி.ப. 3.00மணிக்கு. குறிப்பு: கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு யாழ். பிரபல ஆசிரியரின் சேவை பெறப்படும். சி.பவானந்தன் நிர்வாகி. (3077)

### பெயர் மாற்றம்

கந்தசாமி போஸ்கரன் நிச்சட்கம் டி-2 கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்ட நான் எனது பெயரை 12.04.2003 முதல் கந்தசாமி பாஸ்கரன் என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதனை சகலருக்கும் அறியத் தருகின்றேன். க.பாஸ்கரன்(3080)


## மீண்டும் பழைய இடத்தில்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி உபதபாலகம் மீண்டும் சிவிக்சென்ரர் பகுதியில்இயங்க ஆரம்பித்துள்ளது. 1996இல் சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து சில்லாவீதிச் சந்திப் பகுதியில் இயங்கிவந்த உபதபாலகமே கடந்த செவ்வாய் முதல் பழைய இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. (12)

## பாதிக்கப்பட்டவர்களுக்கு வட்டக்கச்சியில் உதவி வழங்கல்

வட்டக்கச்சிப் பிரதேச இராமநாதபுரம் பகுதியில் இன்று காலை 9.10 மணிக்கு கரைச்சிப் பிரதேசசபைப் பணிமனையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி வழங்கல் நிகழ்வு ஆரம்பமானது.

மேற்படி நிகழ்வானது உதவி அரசாங்க அதிபர் பொன். நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்றது சிறப்புரைகளும் இதில் வன்செயலால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு அரசாங்க அதிபர் இராசநாயகம் முச்சக்கர வண்டி ஒன்றையும் மற்றொருவருக்கு தையல் இயந்திரம் ஒன்றினையும் அன்பளிப்புச் செய்தார். ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட கணவனால் கைவிடப்பட்ட, வன்செயலால் கணவனை இழந்தவர்களுக்கும், வன்செயலால் பாதிக்கப்பட்ட ஆண், பெண், இருபாலருக்கும் உடைப் பொதிகளை வழங்கினர். இந்நிகழ்வின் வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்த் துறைப் பொறுப்பாளர் வேளினி உட்பட கிராம சேவையாளர்கள், பொது மக்கள், நலன் விரும்பிகள் பலர் கலந்து கொண்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (12)

## பரிசளிப்பும் புத்தாண்டு நிகழ்வும்

இலங்கை வங்கியினால் நடாத்தப்பட்ட சீட்டிழுப்பில் பரிசு பெற்றோருக்கான பரிசளிப்பு விழாவும் புத்தாண்டு சிறப்பு நிகழ்வுகளும் நாளை பிற்பகல் 3.00 மணிக்கு இலங்கை வங்கி முல்லைத்தீவுக் கிளையில் நடைபெறவுள்ளது. (26)


## மாபெரும் மலிவு விற்பனை

புதுவருடத்தை முன்னிட்டு காலணிகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

"ஆகன் காலணியகம்"

Bata, D-S-I, RANPA, இறக்குமதி செய்யப்பட்ட காலணிகள், உள்நாட்டு உற்பத்தி காலணிகள், பாக், குடை போன்றவைகளை தெரிவு செய்ய நாடவேண்டிய இடம்.



"ஆகன் காலணியகம்"



யாழ்.சாலை (1 -9, தங்ககம் அருகாமையில்) கிளிநொச்சி

(3083)

## சாவு அறிவித்தல்

### அருட்சகோதரி மேரி கொன்ஸ்ரன்ஸ் சபாபதி

சூராவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது பேசாலை திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தில் பணி புரிந்தவருமான அருட்சகோதரி கொன்ஸ்ரன்ஸ் சபாபதி 12-04-2003 இறைவனடி இணைந்துவிட்டார். இவரது நல்லடக்கம் 13-04-2003 மாலை 4.00 மணிக்கு மன்னார் திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தில் இடம்பெறும்.

*121. பிரதான வீதி. யாழ்ப்பாணம்.*

(3082)

தகவல்: *மாகாணத் தலைவி!*

# ஈராக் மீதான நடவடிக்கையின் இலக்குகளை எட்டுவதற்கு அமெரிக்கா தவறிவிட்டது!

## - ஐ.நா.வுக்கே முக்கிய பங்கெனவும் வலியுறுத்து

**அமெரிக்கா தலைமையிலான தாக்குதல்கள் ஈராக்கில் ஆயுதங்களை களைவது என்னும் முக்கியமான இலக்கை அடைய அது தவறிவிட்டது எனவும் யுத்தத்திற்கு எதிரான மூன்று நாடுகளின் தலைவர்கள் கூட்டாக அறிவித்துள்ளனர். அத்தோடு, ஈராக்கில் புதிய அரசு அமைக்கும் நடவடிக்கையில் ஐ.நா.விற்கு முக்கிய பங்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகியவற்றின் தலைவர்கள் மொஸ்கோவில் கூடி ஈராக் நிலவரம் குறித்து ஆராய்ந்துள்ளனர். இதில் ஈராக்கில் புதிய அரசமைக்கப்படுகையில் ஐ.நா.வுக்கு முக்கிய பங்கு கிடைக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும் அமெரிக்க நடவடிக்கைகளுக்கு அவர்கள் கண்டனம் வெளியிட்டனர்.

ஐ.நா.தான் நியாயமாக நிர்வாகப் பொறுப்பை ஏற்கக்கூடிய அமைப்பாகும் என்றும் அப்போது அவர்கள் கூறினர்.

ஈராக்கில் சதாமின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக அமெரிக்க, பிரிட்டிஷ் படைகளைக் குறை கூறிய ரஷ்ய சனாதிபதி புட்டின் சதாம் இல்லாத உலகம் மேம்பட்டிருக்கலாம். ஆனால் முதலாளித்துவ சனநாயகங்களை ஏற்றுமதி செய்வது நிராகரிக்க வேண்டியது அவசியம் என்றார்.

உலகில் 80 சதவீத மக்கள் மேலை நாடுகளில் சன நாயகத் தரத்தைப் பின்பற்றாமல் இருக்கும் நிலையில் இவர்கள் அனைவருடனும் சண்டையிட முடியுமா..? என வினாவெழுப்பியுள்ளார். இந்த மூன்று நாடுகளும் ஈராக் போரை எதிர்த்ததோடு ஈராக் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தி வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.



பஹ்ரெனில் அமெரிக்க சனாதிபதி மற்றும் பிரிட்டிஷ். இஸ்ரேல் பிரதமர்களின் கொடும்பாவிகள் யுத்த எதிர்ப்பாளர்களால் எரியூட்டப்படுகின்றது.



பஸ்ராவில் பிரிட்டிஷ் படையினரால் வழங்கப்படும் நீரைப் பெற முண்டியடிக்கும் ஈராக்கிய சிறுவர்கள்.

# சார்ஸ் நோயின் தாக்கம் ஓரளவு கட்டுப்பாட்டில்!

உலகளாவிய ரீதியில் பரவி வந்த சார்ஸ் நோய் பல நாடுகளில் கட்டுப்படுத்தப்பட்டுள்ள போதும், சீனாவின் நிலை என்ன என்பது தெரியவில்லை என்று உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

ஆசிய நாடுகளில் பதற்றத்தை ஏற்படுத்திய இந்த மர்மநோய் பற்றி உலக சுகாதார நிறுவனம் ஒரு மாதத்திற்கு முன்பு எச்சரிக்கை விடுத்திருந்தது. இதனையடுத்து எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கைகள் காரணமாக இந்நோய் தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வியாழன் சுகாதார நிறுவனம் எடுத்த புள்ளி விபரங்களின் படி 101பேர் பலியாகியுள்ளனர்.

காய்ச்சலும் இருமலுமே இந் நோயின் அறிகுறியாகும்.

# ஐவரிக்கோஸ்ரில் மோதல் கூட்டரசு முயற்சி பின்னடைவு!

ஐவரிக்கோஸ்ரின் கிளர்ச்சிவாதிகளும் அரசாங்கப்படைகளும் யுத்த நிறுத்தத்தை மீறிவிட்டதாக அந்நாட்டிலுள்ள சர்வதேச யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் கூறியுள்ளார்கள்.

கடந்த 07 மாதங்களாக ஐவரிக் கோஸ்ரில் இடம்பெற்றுவரும் சண்டைகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் முடிவுகளுக்கு வன்செயல்கள் அச்சுறுத்தலாக அமைந்துள்ளன என்றும் கூறியுள்ளனர்.

கடைசியாக இடம்பெற்ற மோதல் காரணமாக, கூட்டு அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு எடுத்த முயற்சிகள் தோல்வி அடைந்துள்ளன.

# ஈராக்கில் உள்நாட்டு கலவரம் வெடிப்பு; கட்டுப்படுத்த மேலதிக படைகள் விரைவு!

சதாம் ஹுசைன் ஆட்சி முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து ஈராக்கில் உள்நாட்டு கலவரம் வெடித்துள்ளது. இதனைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர அமெரிக்க படையினர் பாக்தாத் உள்ளிட்ட பல நகரங்களுக்கு மேலதிகமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் ஊரடங்கு சட்டமும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. பாக்தாத் நகரிலும் வடக்கிலுள்ள மொசூல் நகரிலும் அமெரிக்க இராணுவம் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

நகரவாசிகள் சூறையாடுவதை தடுக்கவே, இவ் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்கப் படைகள் பாக்தாத்தை கைப்பற்றியதிலிருந்து அங்கு சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது.

மக்களில் சிலரே அரச கட்டடங்கள், அலுவலகங்கள், வீடுகளில், ஏன் மருத்துவமனைகளில் கூட சூறையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

நகரின் சட்ட ஒழுங்கைப் பராமரிக்க கூட்டணிப் படைதிணறிக் கொண்டிருக்கும் வேளை, பாக்தாத் நகரமே வசதிகள் சீர்குலைந்த நிலையில் காணப் படுகின்றது என செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது.

அல்ஹிந்தி மருத்துவமனையில் மருத்துவர்களும், செவிலியர்களும் தம்மைக் காத்துக் கொள்வதற்காக ஆயுதங்களைப் பயன்படுத்தத் தயாராக இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

பாக்தாத் நகரவாசிகள் துப்பாக்கிகளை ஏந்தி, சூறையாடுவோர்களைத் தாக்குவதாகவும், சாலைகளில் தடைகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் சில தகவல்கள் கூறுகின்றன.


ஈராக்கின் வருங்காலம் குறித்து விவாதிப்பதற்காக அமெரிக்கா நஸ்ரியாவில் வரும் செவ்வாய்க் கிழமை கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

நாட்டிற்குள்ளும் வெளியிலும் இருக்கும் ஈராக்கியர்கள் கலந்து கொள்ளும் இக்கூட்டம் இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைப்பது பற்றியது என வாஷிங்டன் அமைச்சக அதிகாரி கூறியுள்ளார்.

ஆனால், ஈரானிலுள்ள ஈராக்கிய எதிர்க்கட்சியினர் இக்கூட்டத்தை புறக்கணிக்கப்போவதாகக் கூறியுள்ளனர்.



குர்திஷ் இன போராளிகள் வட ஈராக்கின் கிர்குக் நகரில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.



ஈராக்கிய மத்தியவங்கி உடைக்கப்பட்டதைத் தொடர்ந்து மொசூல் நகரில் ஈராக்கியர் ஒருவர் செல்லுபடியற்ற தினார் நாணயத் தாளை கிழிக்கிறார்.

# 'பொடோ' சட்டத்தில் விரைவில் திருத்தம் கருணாநிதிக்கு துணைப் பிரதமர் உறுதி

(சென்னை)

பொடோ சட்டம் முறை கேடாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கத் தேவையான மாற்றங்கள் இச்சட்டத்தில் கொண்டுவரப்படும் என தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியிடம் துணைப்பிரதமர் எல்.கே. அத்வானி நம்பிக்கை அளித்துள்ளார்.

இதனை கடிதம் வாயிலாக திரு. கருணாநிதிக்கு எல்.கே. அத்வானி கூறியதாக ம.தி.மு.க. தலைவர் எல்.கணேசன் தி.மு.க. அலுவலகத்தில் கருணாநிதியைச் சந்தித்த பின்னர், சென்னையில் இதனை செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

ஒரிஸாவில் கந்தர்கர் மாவட்டத்தில் நடைபெற்ற இராமர் ஊர்வலத்தில் மோதல் ஏற்பட்டதையடுத்து காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இதன் போது 02 பேர் கொல்லப்பட்டதுடன், 04பேர் காயமடைந்துள்ளனர். நிலைமைகள் பதட்டமாக இருப்பதாக மாநில காவல்துறை தலைமை அலுவலர் கூறியுள்ளார்.

அவ்வூரில் ஊரடங்கு உத்தரவும், தடை உத்தரவும் விதிக்கப்பட்டுள்ளது.



பாக்தாத்திலுள்ள உளவுப்பிரிவு தலைமையகத்தில் தேடுதலில் ஈடுபடும் அமெரிக்க மூன்றாவது படைப்பிரிவு வீரர்கள்.

# நீச்சல் ஒரு சிறந்த பயிற்சி

இலங்கையில் நீச்சலானது ஆதிக்குடிகள் காலம் தொட்டு இருந்துவரும் விளையாட்டுக்களில் ஒன்றாகும். நீச்சலானது, அரச குடும்பத்தவர்களால் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட தடாகங்கள், அணைகள் என்பவற்றிலும்



இயற்கையாக அமைந்துள்ள ஆறு, குளம், ஏரிகளிலும் பயிலப்பட்டு வந்தது. இலங்கையானது ஒரு தீவாக அமைந்துள்ளதால் அதிக கரையோரங்கள் கொண்டமைந்துள்ளது. இதன் காரணமாக அனேக மக்கள் கடலில் நீந்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். பண்டைக்காலம் தொட்டு இலங்கையைச் சூழ உள்ள ஆழம் குறைந்த கண்ட மேண்டப் பகுதிகளில் முத்துக்



குளித்தல் பிரபல்யம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

நீச்சலானது ஒரு போட்டிக்குரிய விளையாட்டாக GO-YOZEI என்னும் மன்னரால் 1603இல் பிரகடனப்படுத்தப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. எனினும் இதற்கு முன்பே நீச்சற் போட்டிகள் இடம்பெற்றுள்ளன என்னும் பதிவுகளும் உண்டு. கடற்கரைக் குளியலானது உலகளாவிய ரீதியில் நீண்டகாலமாக பிரபல்யம் பெற்றுள்ளது. பிரித்தானியாவில் நீச்சற் போட்டிகள் 1791இல் இடம்பெற்றன. காலத்தால் முந்திய நீச்சல் தடாகமாக வட லண்டனில் உள்ள "பர்லஸ் பூல்" விளங்குகின்றது.

நீச்சலானது ஏனைய உடற்பயிற்சிகளையும் விட மேலான பல அனுகூலங்களை கொண்டதாக காணப்படுகின்றது. ஏனைய விளையாட்டுக்களைப் போல் அல்லாது அனைத்து உடற் கூறுகளும் ஒரே நேரத்தில் பயிற்சியில் ஈடுபடுத்தப்படுகின்றன. நீச்சலின் போது கைகள் அசைக்கப்படுகின்றன. தலை, கழுத்து என்பன அசைக்கப்படுவதோடு முண்டம் உடலை நீரின் மேல் சமநிலைப்படுத்துவதோடு விரும்பிய திசைக்கு அசைக்கவும் உதவுகின்றது. இதே போன்று ஏனைய விளையாட்டுக்களில் எல்லா அவயவங்களும் பயிற்சியில் ஈடுபடுவதில்லை. இதனால் தான் ஒரு நீச்சல் வீரனின் உடற்கட்டானது ஒரு சீரான அபிவிருத்திக்கு உட்பட்டிருப்பதை அறிய முடிகின்றது.

இன்று நீச்சலானது ஒரு அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டாகவும் சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளில் பிரபல்யம் மிக்கதாகவும் காணப்படுகின்றது. எமது தமிழீழப் பிரதேசத்தில் இவ்விளையாட்டு. பண்டைக்காலம் தொட்டு பயிலப்பட்டுவரும் ஒரு விளையாட்டாகவே காணப்படுகின்றது. வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. நவரட்ணசாமி என்பவர் இலங்கைக்கும். இந்தியாவுக்கும் இடையிலான பாக்கு நீரிணைப்பகுதியை நீந்திக்கடந்து சாதனை படைத்தார். அதே இடத்தினைச் சேர்ந்த பிரபல்யம் மிக்க வீரன் திரு. ஆழிக்குமரன் ஆனந்தனும் இதே சாதனையை ஏற்படுத்தினார். ஆழிக்குமரன் ஆனந்தன் பல சாதனைகளைப் புரிந்த தமிழ்வீரன். இவர் ஆங்கிலக்கால்வாயை நீந்திக்கடக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது நீச்சலிலேயே மரணத்தை எதிர்கொண்டார். எமது தமிழீழப் பிரதேசம் அதிக கரையோரங்களைக் கொண்டதாகவும் அதிக குளங்களைக் கொண்டதாகவும் காணப்படுவதால் நீச்சலில்



ஈடுபடும் அதிக வீரர்களை உருவாக்க முடியும். கடந்த 198 ஆம் ஆண்டு கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த திரு. எமிலியாஸ் பிள்ளை பின் பக்க நீச்சலிலே மூன்றாமிடத்தைப் பெற்று பதக்கம் பெற்றதும் எமது போராளிகள் கடலில் ஏற்படுத்திய பல சாதனைகளும் எமது பகுதியில் நீங்காப் பிரபல்யம் அடைவதற்கு தக்க சான்றுகளாகும். எனவே இச்சமாதான சூழலில் எமது பகுதி வீரர்களை நீச்சலில் பிரபல்யப்படுத்த துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் ஆர்வலர்கள். விளையாட்டுத்துறையினர் ஈடுபடுவார்களானால் நிச்சயம் எமது வீரர்கள் தேசியரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பிரபல்யம் அடைவார்கள் என்பது திண்ணம்.

**உருத்துார் இ. சிவன்.**

## விளையாட்டு அரங்கு

- ஜெயந்திரன்

# கிரிக்கெட்டில் இருந்து ஒதுங்கும் ஹூப்பர்

மேற்கிந்திய தீவு அணியின் தலைவர் பதவி பறிக்கப்பட்ட கார்ல் ஹூப்பர், அணியில் ஒரு வீரராக இடம்பெற்ற போதும் டெஸ்ட் அணியில் இருந்து விலகுவதாக திடீர் அறிவிப்பு செய்துள்ளார்.

இத்திடீர் அறிவிப்பானது அவரது கிரிக்கெட் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டாரா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மூன்று வருடங்களிற்கு முன்னர் லாரா மேற்கிந்திய தீவு அணியை நிர்வகித்த போது மீளமுடியாத தோல்வியில் அணி இருந்த போது சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்று அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வந்த கார்ல் ஹூப்பர் அழைக்கப்பட்டு அணித் தலைவர் பொறுப்பு வழங்கப்பட்டதுடன் இதற்குத் தகுதியானவர் அவரே என்றும் அறிவிக்கப்பட்டது.

லாறா, சந்திரபோல், ஜேக்கப்ஸ் ஆகிய அனுபவம் வாய்ந்த வீரர்களைத் தவிர மற்றைய அனைவரும் இளம் புதுமுகங்களுடன் காணப்பட்ட மேற்கிந்திய தீவு அணியை ஒரு சில மாதங்களில் வெற்றிப்பாதையில் வழிநடத்திச் சென்ற ஹூப்பர் சவால் நிறைந்த அணி ஒன்றுக்கு தலைவராக மிளிர்ந்தார் என்றால் மிகையில்லை.

ஆடுகளத்தில் வீரர்களுடன் அதிகம் அலட்டிக்கொள்ளாத ஹூப்பர் சக வீரர்களுடன் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொள்பவர்.

சகலதுறை ஆட்டக்காரராக விளங்கும் ஹூப்பர் விக்கெட்டுக்கள் வேகமாகச் சரியும் போது நின்று நிலைத்தாடுவதுடன் ஆட்டத்தின் போக்கையே மாற்றியமைக்கும் வல்லமை கொண்டவராக விளங்குவதுடன் பந்து வீச்சில்அணியின் முன்னணி சுழல் பந்து வீச்சாளராக திகழ்வதுடன் போட்டித் தன்மையின் போக்கை மாற்றும் முடிவுகளை வேகமாக எடுப்பதில் சிறந்து விளங்குகின்றார்.

இந்நிலையில் நடந்து முடிந்த உலகக் கிண்ணப் போட்டியில் அணி மோசமாக விளையாடியது என்று கூறி அணித் தலைவர் பதவி பறிக்கப்பட்டு இரண்டாவது தடவையாக பிறைன் லாறாவிடம் அணிப்பொறுப்பை ஒப்படைத்துள்ளது அந் நாட்டு கிரிக்கெட் சபை. இது ஒட்டுமொத்தத்தில் ஏனைய அணிகளின் பல முன்னணி வீரர்கள்அணியிலிருந்து ஓரம்கட்டப்பட்டது. நிலையில் மீண்டும் துளிர்விட்ட ஹூப்பரின் கிரிக்கெட் வாழ்க்கைக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக அமைந்து விட்டதா என்ற கேள்வியை எழுப்பியது.

36 வயதான ஹூப்பர் 102 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 36.46 என்ற சராசரியைப் பெற்றுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கும் போது; டெஸ்ட் அணியில் இருந்து விலகி இருப்பது என்பது மிகவும் கடினமான முடிவாகும். புதிய தலைமையின் வழிகாட்டலில் புதிய கோணத்தில் அணி செல்லவுள்ள நிலையில் அணியில் விளையாடும் எண்ணம் இருந்தாலும் அது இளம் வீரர்களின் முன்னேற்றத்தை பாதி த்துவிடும் எனத் தெரிவித்துள்ளதுடன் அது ஒட்டுமொத்தத்தில் மேற்கிந்திய கிரிக்கெட்டுக்கு பின்னடைவை ஏற்படுத்திவிடும் எனத் தெரிவித்துள்ளதானது அவர் ஓய்வை விரைவில் அறிவிப்பார் என்ற நிலையை தோற்றுவித்துள்ளது.

இந்நிலையில் தற்போது சகல துறைகளிலும் திறமை வாய்ந்த அணிகளில் ஒன்றாக சர்வதேச அரங்கில் மீண்டும் வீறுநடைபோடும் மேற்கிந்திய தீவு அணியை புதிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ள பிறைன் லாறா தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்வாரா?.



# 2000 போட்டிகளைத் தாண்டிவிட்ட ஒரு நாள் போட்டி!

பாகிஸ்தானுக்கும் சிம்பாவ்வேக்கும் இடையில் சார்ஜாவில் நடைபெற்ற இறுதிப் போட்டி ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் 2000 ஆவது போட்டியாக அமைந்துள்ளது.

05.01.1971 இல் மெல்பேர்ன் நகரில் முதலாவது போட்டி அவுஸ். இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

100ஆவது ஒருநாள் சர்வதேச போட்டி நடைபெறுவதற்கு சுமார் 11 ஆண்டுகள் சென்றன. 18-12-1980 இல் 100ஆவது போட்டி நடைபெற்றது. அவுஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கிடையில் சிட்னியில் நடைபெற்றது.

500ஆவது போட்டி, 22-01-1988 இல் இந்திய மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

1000ஆவது போட்டி, 26-05-1995இல் இங்கிலாந்து மேற்கிந்திய தீவு அணிகளுக்கிடையில் இங்கிலாந்தின் ஓவல் மைதானத்தில் நடைபெற்றது. 1500ஆவது போட்டி, மேற்கிந்திய தீவுகள் பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் ரொண்டோவில் நடைபெற்றது. 2000வது போட்டி, பாகிஸ்தான் சிம்பாவ்வே அணிகளுக்கிடையில் நடைபெற்றுள்ளது.

இதுவரை ஆகக்கூடுதலான போட்டிகளில் பங்குபற்றிய அணியாக பாகிஸ்தான் திகழ்கின்றது. இவ்வணி 553 போட்டிகளில் பங்குபற்றியுள்ளது.

கூடுதலான வெற்றிகளைப் பெற்ற அணியாக அவுஸ்திரேலியா திகழ்கின்றது. அவ்வணி 315 போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளது. கூடுதலான சதவீத வெற்றிகளைப் பெற்ற அணியாக தென்னாபிரிக்கா திகழ்கின்றது. அவ்வணி 63.89 சதவீதமான போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளது.

தொடர்ச்சியாக அதிக வெற்றிகளைப் பெற்ற அணி அவுஸ்திரேலியா 17 வெற்றிகள். தொடர்ச்சியாக கூடுதலான தோல்வி அடைந்த அணி பங்களாதேஷ். அது 24 ஆகவுள்ளது.

இதுவரை ஆகக் கூடுதலான போட்டி நடைபெற்ற மைதானம் சார்ஜா மைதானம். 198 போட்டிகள். அதற்கு அடுத்ததாக சிட்னி 118.

கூடுதலான போட்டிகளில் பங்குபற்றிய வீரராக பாகிஸ்தானின் வசீம் அக்ரம் திகழ்கின்றார். 356 போட்டிகள். அத்துடன் 502 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி முதல் இடத்தில் உள்ளார்.

கூடுதலான ஓட்டங்களை பெற்றவர் சச்சின் டெண்டுல்கர் 12219

ஆகக் கூடுதலான ஆட்டம் இழப்புக்களைச் செய்தவர்களில் அவுஸ்திரேலியாவின் அடம் கில்கிறிஸ்ட் (270) முன்னணியில் உள்ளார். இவர் 233 பிடிகளையும் 37 ஸ்டம் அவுட்களையும் செய்துள்ளார்.

விக்கெட் காப்பாளர் இல்லாது வீரர்களில் கூடுதலான பிடிகளைக் கைப்பற்றியவர் மொஹமட் அஸாருதீன் ஆவார். 156 பிடிகளை அஸாருதீன் கைப்பற்றியுள்ளார்.

# வட- கிழக்கில் பாதிப்புற்ற சிறுவர்களின் மேம்பாட்டுக்கான திட்டங்கள் தயாரிப்பு

கிளிநொச்சியில் இடம்பெற்ற போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான புனர்வாழ்வு பற்றிய செயலமர்வு நேற்று முன்தினம் நிறைவு பெற்றது.

யுனிசெப்பின் சிறிலங்காவுக்கான பிரதிநிதி டெட்சாய்பன் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வு கிளிநொச்சியில் வியாழக்கிழமை ஆரம்பமாகியது.

இச்செயலமர்வின் முடிவில் ஊடகங்களுக்கான செய்திக் குறிப்பு ஒன்று வெளியிடப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இந்த ஆய்வுப் பட்டறையில் பங்கெடுத்த சகலரும் போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் ஆபத்தான தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சிறுவர்கள் மற்றும் ஆதரவற்ற சிறுவர்கள், ஆட்சேர்ப்பில் இணைய முன்வரும் சிறுவர்கள், ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட சிறுவர்கள் உள்ளடங்கலான சிறுவர்களின் வாழ்வு நிலைகளை பழைய நிலைக்குக் கொண்டு வருவது அதனை உறுதி செய்வது தொடர்பானதுமான திட்ட நடவடிக்கையின் செயற்பாட்டு வடிவங்களை ஒன்றுகூடி ஆய்வு செய்துள்ளனர்.

இந்த திட்ட நடவடிக்கையானது அமுல்படுத்தும் முறைகளுக்கான ஓர் ஒருங்கிணைந்த அலகுமுறையை கையாளுதலையும் சிறுவர்களின் சிறந்த நலன்களுக்கு வழிகாட்டும் வழிமுறையையும் அடிப்படையாகக்கொண்டது.

மேலும், இந்தத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட அலுவலர்களில் காணப்படவேண்டிய நடத்தை, தராதரம் மற்றும் கொள்கை தொடர்பான தெளிவான தீர்மானப் பண்புகள் என்பன வற்றையே இந்த வழிகாட்டல் நடைமுறைக் கொள்கைகளிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு, ஆதரவளித்தல் மற்றும் நற்பயனளித்தல் நிகழ்ச்சித் திட்டத்தில் குடிசார் சமூகத்தின் பங்கானது இந்தத் திட்டத்தின் விளைவாக வலியுறுத்தப்படுகின்றது.

இந்தத் திட்டங்களில் பங்கெடுக்கும் அனைத்துத் தரப்பினரும் பக்கச்சார்பில்லாத நடுநிலைமைப் போக்கைப் பேணி இந்த அனைத்துத் திட்டங்களும் வெற்றியளிக்க வழி செய்தல்.

இந்தத் திட்டவரைபானது பின்வரும் பிரமாணங்களை உள்ளடக்கியுள்ளது. அவையாவன;

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான பயிற்சி நெறியின் நடவடிக்கைத் திட்டமானது தமிழீழ விடுதலைப் புலிகளுக்காகவும், சிறிலங்கா அரச ஆயுதப் படையினருக்காகவும் மற்றும் சமூகம் சார்ந்தவர்களுக்காகவும், சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான நிபந்தனைகளை உள்ளடக்கியிருக்கின்றது.



இந்தப் பயிற்சி நெறியானது 2003 ஏப்ரல் மாதத்தின் இறுதிப் பகுதியில் தொடங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. சமூக மட்டத்திலும், பெற்றோர் மட்டத்திலும் சிறுவர் களின் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக ஒரு விழிப்புணர்வு கருத்துப் பரப்புரையை மேற்கொள்வதன் மூலம் சிறுவர்களின் உரிமைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுக்க முடியும்.

முறைசாராக் கல்வி மற்றும் ஆரம்பக் கல்வி நிலையங்கள் ஊடாக கற்பதற்கான வாய்ப்புக்களைப் போரினால் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அனைவருக்கும் பெற்றுக் கொடுக்க இத்திட்ட வரைபின் கல்வித் திட்டம் வழி சமைக்கும்.

அத்தோடு, பெற்றோர் மற்றும் சமூகங்களுக்கிடையிலான விழிப்புணர்வு உள்ளடங்கலாக பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களை அபிவிருத்தி செய்தல், போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் சத்துணவுத் திட்டங்கள் மற்றும் அடிப்படைச் சுகாதார பராமரிப்புத் திட்டங்களின் நிபந்தனைகள் பராமரிப்பு நிலையங்களிலும் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான வசதி வாய்ப்பு நடைமுறைகளிலும் காணப்படுகின்றன.

இந்தத் திட்டங்களானது அந்தச் சிறுவர்கள், தமது குடும்பங்கள் மற்றும் சமூகங்களைச் சென்றடையும்போது பேணப்படும்.

தமது குடும்பங்களிடம் மீளத்திரும்பிச் செல்ல முடியாத நிலையில் உள்ள பிள்ளை களுக்கான பௌதீக பராமரிப்பு மற்றும் சமூக செயற்பாட்டு உட்கட்டுமான பலப் படுத்துதல் மற்றும் வெவ்வேறு தன்மையுடைய பராமரிப்புப் செயற்பாடுகள் என்பன வற்றுக்கான உடன்பாட்டு நிபந்தனைகள் பேணல். இந்த திட்ட நடவடிக்கையின் அமுலாக்க கண்காணிப்புச் செயற்பாட்டிற்கு ஐக்கிய நாடுகள், சிறுவர் பாதுகாப்பு நிதியம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் குழந்தைகள் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் ஆகியவற்றால் அனுசரணை வழங்கப்படும்.

வடக்கு கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் உரிமைகளை கண்காணிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் நிர்வகிக்கப் படும் ஒரு கண்காணிப்புச் செயற்பாடு தொடர்பான அமைப்பு பேணப்படும்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியனவற்றால் கூட்டாக நிர்வகிக்கப்படும் பராமரிப்பு, ஆட்சேரச் செல்லும் சிறுவர்கள் மற்றும் படையில் சேர்க்கப்பட்ட வயது குறைந்தவர்கள் போன்றோரை ஒருங்கிணைக்கவும், விடுவிப்பதற்குமான ஒரு நடைமுறை அமைப்பு பேணுதல், உள்ளூர் சிறுவர் பராமரிப்புச் சேவை அதிகாரிகள், பராமரிப்பு நிலையங்களிலும் அவ்வப்போது தமது செயற்பாடுகளை மேற்கொள்வர்.

சுழற்சி முறைக் கடன் நிதிகள் மற்றும் நுன்கருத்திட்ட கடன் வசதி வாய்ப்புக்கள் ஊடாகத் தொழில்சார் பயிற்சி நெறி மற்றும் ஏனைய உற்பத்திகள் ரீதியான செயற்பாடுகளுக்கு ஆதரவு அளித்தும் நுன்கருத்திட்ட கடன் வசதி வாய்ப்புக்களையும் வருமானம் ஏற்படுத்தும் செயற்பாடுகளையும் பேணல்.

நடமாடும் சேவை அலகுகள் ஊடாகவும் அடிப்படை வாழ்வாதார அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட தொழில்சார் நிலையங்களின் ஊடாகவும் தொழில்சார் பயிற்சி நெறிக்கான ஏதுநிலைகளின் அபிவிருத்தியும், தொழில்சார் பயிற்சியும் ஒரு செயற்பாட்டு குழுவினரால் மேற்கொள்ளப்படும்.

இதேவேளை இந்த செயற்பாட்டுக் குழுவானது வடக்கு கிழக்கில் உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவுக்கு இந்தத் திட்டம் தொடர்பான காலாண்டு வாரியான முன்னேற்ற அறிக்கையினை முறையே கையளிக்கும் இந்தத் திட்ட நடவடிக்கை யானது அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை களின் போது சமர்ப்பிக்கும் முகமாக ஏப்ரல் 29ஆம் நாளின் முன்னர் இறுதி செய்யப்படும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இச்செயலமர்வில் யுனிசெப் நிறுவன பிரதிநிதிகள், விடுதலைப்புலிகள் மற்றும் அரச தரப்பு பிரதிநிதிகள், வடக்கு கிழக்கு மாவட்டங்களின் அரச அதிபர்கள், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். □

## உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் மே மாதத்தில் இலங்கை வருகை

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் எதிர்வரும் மே மாதம் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்-என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர்கள் இலங்கையின் நிலைமைகளை ஆராய்ந்து அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடத்தவுள்ளதாகவும், கொத்மலை நீர்த்தேக்கம், காமினிதிஸாநாயக்க நீர்த்தேக்கம் என்று பெயர் மாற்றப்பட்ட வைபவத்தில் பேசுகையிலேயே பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த 20 வருடங்களாக நாட்டில் யுத்தம் ஏற்பட்டிருந்தது. இதனால் இலங்கைக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகள் தடைப்பட்டிருந்தன.

இதனால் பொருளாதார அபிவிருத்திகள் பாதிப்படைந்தன. தற்போது யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், வெளிநாட்டு உதவிகள் இலங்கைக்குக் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள் ளார்.

எதிர்வரும் மே மாதம் வரும் பிரதிநிதிகள் இங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து, பேச்சுக்கள் நடத்தி, ஜப்பானில் யூன் மாதம் நடைபெறும் உதவி வழங்கும் மாநாட்டில் சிபார்சுகளைச் செய்வார்கள் என்றும் பிரதமர் கூறியுள் ளார்.

## புதிவு செய்யாதோர் கவனத்திற்கு!

(ஒட்டுசுட்டான்)

பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவு சம்பந்தமாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் திருமதி.ந.செல்வராசா தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

கடந்த புதனன்று கிராம அலுவலர்களுக்கும் பிறப்பு இறப்பு பதிவாளர்களுக்கும் மேலதிக விளக்கங்களை மேலதிக மாவட்ட பிறப்பு இறப்புப் பதிவாளர் என். சண்முகநாதன் வழங்கினார்.

இதில் இடப்பெயர்வு காரணமாக அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு திருமணப்பதிவு ஆகியவற்றை இதுவரை பதிவு செய்யாமல் இருப்போர் தங்கள் பதிவுகளை மேற்கொள்ள கிராம அலுவலகர் அல்லது பதிவாளர் ஆகியோருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர். (05)

## மீள் குடியேற்றத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா

திரியாய் கிராமத்தில் மீள் குடியேற்ற நடவடிக்கையை ஆரம்பிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட 10 பயனாளிகள் குடும்பங்களின் வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவமும் சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுவினருக்கான கட்டடத் திறப்பு விழாவும் கடந்த 27ஆம்ஆம் திகதி நடைபெற்றன.

பாராளுமன்ற உறுப்பினர்களாக இரா.சம்பந்தன் கே.துரைரத்தினசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்களான இணைப்புச் செயலர் மாதவராசா, திட்ட அலுவலர் கலைவர்ணன்,திட்ட பொறியியலாளர் அன்ரன் விஜேகுமார் ஆகியோரும் நெறியாளர் சபை உறுப்பினர் ச.குமரகுருபரனும் இவ்விழாவை நடாத்த ஒழுங்குகள் செய்ததோடு கலந்தும் சிறப்பித்தனர்.

## அங்குரார்ப்பண கூட்டம்

முல்லை மாவட்ட இந்துசமய அபிவிருத்தி சபை அங்குரார்ப்பண கூட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச உதவி அரசாங்க அதிபர் பணி மனையின் மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாயன்று மு.ப.10.00 மணிக்கு முல்லை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்தலைமைப்பீடம் இ.கிருஸ்ண பிள்ளை தலைமையில் நடைபெற்றுள்ளது.

தலைவராக பொ.பேரின்பநாயகம் செயலாளராக புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த செ.ஜீவரத்தினம் பொருளாளராக விசுவமடு பிரதேசத்தைச் சேர்ந்த க.செல்வரத்தினம் ஆகியோருடன் பிரதேச ரீதியாக மாங்குளம் பிரதேசத்தில் மா.வன்னியசிங்கமாப்பாணர் முள்ளியவளைப் பிரதேசத்தில் கி.தியாகராசா ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கு.சச்சிதானந்த மூர்த்தி, நா.வன்னியசிங்கம், முல்லைத் தீவுப் பிரதேசம் செ.உதயகுமார் ஆகி யோருடன் பிரதேசரீதியாக மு.கௌசன் ஆகியோர் தெரிவாகியுள்ளனர். (ஆ)

## - வடக்கு-கிழக்கு புனர்வாழ்விற்கு -

# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம்

# 7 லட்சம் அமெரிக்க டொலர் உதவி

(கொழும்பு)

**வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளவேண்டிய புனர் நிர்மாணத் திட்டங்களுக்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் ஏழு லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளது.**

இரண்டு வருடங்களில் இந்த நிதியினை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் இலங்கைக்கு வழங்கவுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் நேற்று முன் தினம் கொழும்பில் உள்ள பிரதமரின் அலுவலகத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த வைபவத்தில் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட பிரதிநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கியுடெக் நிறுவன வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாக ஆராய்வு

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்த சேவையிலும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கமையவும் கியுடெக் நிறுவனம் தமது செயற்பாடுகளை கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்வது விடயமான விசேட சந்திப்பு கடந்த திங்களன்று காலை 11 மணிக்கு கிளிநொச்சி புனித திரேசாள் ஆலய மண்டபத்தில் மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் அருட் தந்தை ஜெயக்குமார் அடிகளார் தலைமையில் நடந்துள்ளது. இதில் யாழ். ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்து கொண்டார்.

இச்சந்திப்பில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட கியுடெக் நிறுவன உதவி இயக்குனர், இணைப்பாளர், பங்குத்தளங்களின் அருட்தந்தையர்கள், கிளிநொச்சி, முல்லைத்தீவு மறைக் கோட்ட முதல்வர் மற்றும் செடெக் நிறுவனப் பிரதிநிதிகள், கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளர். மாவட்ட இணைப்பாளர் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

இதில் கடந்த ஆண்டுகளில் கியுடெக் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் விடயமாகவும் நடப்பாண்டிலும் இனிவரும் காலங்களிலும் கியுடெக் நிறுவன செயற்பாடுகளை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் சார்பாக இணைந்த சேவையில் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது விடயமாகவும் கலந்துரையாடி பல ஆக்கபூர்வமான செயற்பாட்டுக் கருத்துகள் முன் வைக்கப்பட்டதுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்த வகையில் செயற்பாடுகளிற்கான பூரண ஒத்துழைப்புக்களை வழங்கி தேசிய கொள்கைக் கமைய செயற்படுவதாகவும் நிறுவன இயக்குனரால் தெரிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# உதவிக்கொடுப்பனவுப் பட்டியல் மக்கள் பார்வைக்கு

(அலுவலக செய்தியாளர்)

பச்சிலைப்பள்ளி பளைப் பகுதியில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கான உதவிக் கொடுப்பனவுப் பட்டியல் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவுக்கெனச் சிபார்சு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல்கள் கிராம அலுவலர் அலுவலகங்களிலும பிரதேச செயலர் அலுவலகத்திலும பல நோக்குக் கூட்டுறவுச சங்கக் கிளையிலும் பொது மக்கள் பார்வைக்கு 10-04-2003இல் இருந்து வைக்கப்பட்டுள்ளதால் எதிர்வரும் 18-04-2003ஆம் திகதிக்கு முன்னர் ஆட்சேபனைகள் இருப்பின் எழுத்து மூலம் அறிவிக்குமாறு பிரதேசச் செய லர் சு. புத்திசிகாமணி கேட்டுள்ளார். (அ)

# மருத்துவருக்கு தபாலில் வந்த ஒரு தொகுதி மனித உறுப்புக்கள்

(கொழும்பு)

பேராதனை வைத்திய சாலையில் கடமை புரியும் மருத்துவர் ஒருவருக்கு மனித உடல் உறுப்புக்களைக் கொண்ட பொதியொன்று தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மருத்துவர் பேராதனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இவ் மனித உறுப்புக்கள் வைத்திய அதிகாரிகள், சட்ட நிபுணர்களின் பரிசோதனைக்காக பொலிசாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி வழங்க ஏற்பாடு

கரைதுறைபற்று பிரதேசசபையினால் ஒருங்கிணைக்கப்பட்டு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் 200 வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி பின்வரும் ஒழுங்குமுறையில் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி முள்ளியவளைப்பிரதேசத்திலும் 23ஆம் திகதி முல்லைத்தீவுப் பிரதேசத்திலும், 24ஆம் திகதி செம்மலைப்பிரதேசத்திலும்,25ஆம் திகதி முள்ளிவாய்க்கால் பிரதேசத்திலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

எனவே வீட்டில் வளர்க்கும் நாய்களுக்கு குறிப்பிட்ட திகதிகளில் கொண்டு சென்று தடுப்பூசிகளை வழங்குமாறு பிரதேசசபைச் செயலாளர் திருமதி நேசரட்ணம்-சுகிர்தா கேட்டுக்கொண்டுள்ளார். (20)

# ஒன்றுகூடல்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் கடந்த வியாழனன்று வணிகர்கள், தே.எ.பேரவை உறுப்பினர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு உடையார்கட்டு வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன் சமகால அரசியல் மற்றும் நடைமுறை விடயமாக விரிவான கருத்தை வழங்கினார். (19)


தமிழீழ வைப்பகத்தின் புத்தாண்டு அறிமுகம்

"சூரிய ஒளி" சமூக மேம்பாட்டுக் கடன் திட்டம்

நோக்கம்:

அடிப்படை வசதிகளில் ஒன்றான மின்சார வசதியை வழங்குவதன் மூலம் ஊரக மேம்பாட்டிற்கு உதவுதல்

* மிகக்குறைந்த விலை
* குறைந்த வட்டி வீதம்
* இலகுவாக மீளச் செலுத்தும் முறை
* போக்குவரத்து இணைப்புக்கள் இலசவம்
* பணல் - 10வருடம் ஏனைய உதிரிகள் ஒருவருடம் உத்தரவாதம்.




நீங்கள் செய்ய வேண்டியது:

* தமிழீழ நிர்வாக அமைப்பு ஒன்றின் பணியாளரா?
* சிறிலங்கா அரச நிர்வாக அமைப்பு ஒன்றின் பணியாளரா?
* சுயதொழில் முயற்சியில் ஈடுபடுபவரா? எவராயினும்

உங்கள் வீட்டுக்கு, ஊருக்கு ஒளியூட்ட புத்தாண்டு நன்நாளில் உங்கள் தேட்டக்கணக்கு ஒன்றில் உரூபா 5000/- நிலுவையைப் பேணுங்கள் / புதிய கணக்கு ஒன்றை ஆரம்பியுங்கள்.

தமிழீழ வைப்பகம்

BANK OF TAMILEELAM

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்.

(அ-8067)

## சிந்தனைக்கு



எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்தி லிருந்தே பிறக்கின்றது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 13-04-2003

# யுத்த நிறுத்தத்தின் ஆயுள்?

"வடக்கு-கிழக்குக் கடற்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும்-சிறிலங்கா அரசிற்கும் இடையிலான கடல் எல்லைகள் தொடர்பாக, போர் நிறுத்த உடன்பாட்டில் தெளிவான சரத்துக்கள் அறிமுகம் செய்யப்பட வேண்டும்." என்ற போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வின் நிலைப்பாடானது கட்டாய தேவையாகக் கொள்ளத்தக்க தொன்றே. ஏனெனில், கடலில் போர் நிறுத்த சரத்துக்கள் தெளிவாக வரையறை செய்யப்படாதவிடத்து அடுத்ததொரு போருக்கு கடற்பிராந்தியம் வழிவகுத்து விடக்கூடும்.

கடந்த ஆண்டில் விடுதலைப்புலிகளுக்கும் - சிறிலங்கா அரசாங்கத் திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்பாடு தரைப்பகுதியில் யுத்த நிறுத்தம் குறித்துக் கொண்டிருந்த தெளிவான வரையறைகள் போல் கடற்பரப்பில் கொண்டதாக இல்லை. இவ்வாறு தெளிவான வரையறை செய்யப்படாமைக்கு-கடற்பிராந்தியம் குறித்து உடன் தெளிவான முடிவு எதுவும் எடுக்கமுடியாத சூழ்நிலையும், சிறிலங்கா கடற்படையின் விட்டுக்கொடுக்காப் போக்கும் காரணமாக இருந்தன.

விடுதலைப் புலிகளும், சிறிலங்கா அரசிற்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு செய்துகொள்ளப்பட்ட பின்னர் யுத்த நிறுத்தம் படிப்படியாக மேம்படும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. அதாவது, தரையில் மேம்படும் யுத்த நிறுத்தமானது படிப்படியாகக் கடலுக்கும் விஸ்தரிக்கும் எனவும், சிறிலங்கா அரசாங்கம் இவ்விடயத்தில் புரிந்துணர்வு அடிப்படையில் செயற்படும் எனவும் நம்பப்பட்டது.

ஆனால், எதிர்பார்த்தது போன்று சிறிலங்கா அரசாங்கமோ சிறிலங்கா கடற்படையோ நடந்துகொள்ளவில்லை. மாறாக உடன்பாட்டில் காணப்பட்ட சாதகமான நிலையைப் பயன்படுத்திக் கொண்டு சிறிலங்கா கடற்படை யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபட்டது. இது சில வேளைகளில் யுத்த நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்துவிடுமோ என்ற அளவிற்கு மோசமானதாகவும் இருந்தது. அதாவது, சிறிலங்காக் கடற்படையானது, கடற்பிராந்தியம் முழுவதும் தமது கட்டுப்பாட்டுப் பகுதி போன்றும், தமது இஷ்டத்திற்கு ஏற்ப செயற்பட முடியும் என்பது போன்றும் நடந்துகொண்டது. ஆனால், யுத்த நிறுத்தம் அமுல் செய்யப்ப டுவதற்கு முன்னால் கடலில் அத்தகைய தொரு சூழ்நிலை இருக் கவில்லை.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை அண்டியதாக இருந்த கடற்பரப்பும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாகவே இருந்தது. அப்பகுதியில் சிறிலங்காக் கடற்படை தமது ஆதிக்கத்தைச் செலுத்தவோ அன்றி சுதந்திரமான கடற் பயணங்களை மேற்கொள்ளவோ கூடியதொரு சூழ்நிலையோ காணப்படவில்லை. சில வேளைகளில், சிறிலங்கா கடற்படையின் கட்டுப்பாட்டில் இருந்த கடற்பரப்புக்களில் கூட அதனால் சுதந்திரமாக நடமாடமுடியாது இருந்தது என்பதே யதார்த்தமாக இருந்தது.

அக்காலப்பகுதியில் சிறிலங்காக் கடற்படையானது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைக் கடந்து செல்வதாயின் கடற்கரையோரத்தில் இருந்து குறைந்தது 25 கடல் மைல் தொலைவிற்கும் அப்பால், அதுவும் ஒரு பெரும் தொடரணியாக- இரகசியமான முறையிலேயே தமது பயணத்தைத் தொடர்வதுண்டு. சில வேளைகளில் 25 கடல் மைல் தொலைவிற்கு அப்பால் கூட பெரும் கடற் சமர்கள் நடைபெற்றதும், சிறிலங்காக் கடற்படை பெரும் இழப்புக்களைச் சந்தித்ததும் உண்டு.

இவ்வாறு இருந்த நிலையானது யுத்தநிறுத்த உடன்பாட்டின் பின்னர் மாற்றம் கண்டுள்ளது. சிறிலங்கா கடற்படை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் கரையோரம்வரை அண்மித்து வருவதும்- மீனவர்கள் மீது தாக்குதல்கள் நடத்துவதும், விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிப்பதும் யுத்த நிறுத்த உடன்பாட்டை தமக்குச் சர்தகமாக்கிக் கொள்ளும் ஒருதலைப்பட்சமான நடவடிக்கையே ஆகும். அதாவது முன்னேற்றம் கண்டிருக்க வேண்டிய யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு மாறான வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கை ஆகும்.

ஆகையினால், கடலிலும் யுத்தநிறுத்தம் தொடர்பான தெளிவான வரையறைகள் செய்யப்படுதல் அவசிமானதொன்றாகியுள்ளது. அதாவது, விடுதலைப் புலிகள்கடலில் பாதுகாப்பான நடமாட்டத்திற்கு யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு வகை செய்தல் வேண்டியது அவசியமானதாகியுள்ளது. அதாவது விடுதலைப் புலிகளும் ஒரு கடற்படையைக் கொண்டுள்ளனர். யுத்தநிறுத்தம் கைச்சாத்திடப்பட்ட வேளையில் அவர்களிடமும் கடலில் கட்டுப்பாட்டுப்பிரதேசங்கள் இருந்தன. கடல் வழிப்போக்குவரத்து புலிகளின் முக்கிய போக்குவரத்து மார்க்கங்களில் ஒன்றாக இருந்தது என்பன ஏற்றுக் கொள்ளப்படத்தக்க வகையிலான புதிய யுத்தநிறுத்த விதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

அவ்வாறு இல்லாது விடில் கடலில் மட்டுமல்ல தரையிலும் யுத்த நிறுத்தத்தின் எதிர்காலம் கேள்விக்குரியதாகிவிடும். அதாவது கடலில் ஏற்படும் நிகழ்வுகள் தரையிலும் பாதிப்பைத் தோற்றிவிப்பதாகிவிடும். அத்தோடு கடலில் அத்தகைய நிகழ்வுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகவும் உண்டு. ஏனெனில், சனாதிபதி சந்திரிகாவிற்கு மிகவும் வேண்டியதாகவுள்ள கடற்படைத் தளபதி தயாசந்தகிரி இதுவரையில் யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு மதிப்பளித்துச் செயற்படுபவராகத் தெரியவில்லை. ஆகையினால், கடற்பரப்பில் யுத்தநிறுத்தம் தொடர்பான விதிகள் விரைவில் தெளிவாக வரையறை செய்யப்படுதல் வேண்டும். அதுவே யுத்தநிறுத்தத்தின் காலஎல்லையைத் தீர்மானிக்க வல்லது. அதுவே நாட்டிற்கும் நல்லது. சமாதானத்திற்கும் நல்லது.

# நாட்டில் என்றுமே யுத்தம் வரக்கூடாது என்பதற்காகவே நாம் பாடுபடுகிறோம்

**- மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்**

"என்றுமே இனி இந்த நாட்டில் யுத்தம் வரக்கூடாது.அதற்காகவே நாம் பாடுபடுகிறோம்.இந்த நாட்டில் எமது உரிமைகள் மறுக்கப்பட்டு நாம் தொடர்ச்சியாக இனப்படுகொலைகளுக்கு முகம் கொடுத்தபோது,அதற்கெதிரான எமது முன்னைய தலைவர்கள் சாத்வீக வழியில் நடாத்திய போராட்டங்களும் தோல்விகண்ட நிலையிலேயே நாம் ஆயுத மேந்திப் போராட நிர்ப்பந்திக் கப்பட்டோம்.யுத்தம் எமது விருப்ப மான தெரிவல்ல".

இவ்வாறு விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்துள்ளார்.

புதனன்று திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் இடம்பெற்றது மானுடத்தின் தமிழ்க்கூடல் -2, இசை, நடன, நாடக விழா இரண்டாவது நாளன்று,கலந்துகொண்டு சிறப்புரை யாற்றிய போதே கௌசல்யன் மேற்கண்ட வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கை யில்;

"நாம் அனைவரும் ஒற்றுமையாக ஒருவருடன் ஒருவர் இணைந்து வாழவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். மக்களிடையே நிலவும் முரண்பாடுகள் நீங்கி ஒற்றுமையாக அவர்கள் வாழவேண்டும் என்பதற்காகவே நாம் பாடுபட்டு வருகிறோம்.ஆனால்,யுத்தம் ஓய்ந்து இந்த நாட்டில் சமுகமான வாழ்வு ஏற்படக்கூடாது என்பதற்காகப் பேரினவாத அரசுகள் திட்டமிட்டு எம்மைப் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி போரைத் தொடர்ந்தன".

"இந்த யுத்தத்தினால் எமது மக்கள் சந்தித்த துன்பங்கள் ஏராளம்.குறிப்பாக எமது பெண்கள் இதனால் மோசமாகப் பாதிக் கப்பட்டுள்ளார்கள்.நான் மட்டக் களப்பு,அம்பாறை மாவட்டத்திலிருந்து வந்தவன் என்ற வகையில் இதை மேலும் நன்குணர்ந் துள்ளேன். நான் சிறுவனாக இருந்தபோது 1987ஆம் ஆண்டு தை 28ஆம் திகதி கொக்கட்டிச்சோலையில் ஒரு படுகொலைச் சம்பவம் நிகழ்ந்தது".

"அதன்பின்னர் 1991 ஆனி 13ஆம் திகதி நடைபெற்ற படுகொலையை நான் நேரில் கண்டேன்.அந்தப் படுகொலையில் உயிர்நீத்த ஒரு தாயின் முலையில் அவரின் குழந்தை பாலருந்திக்கொண்டிருந்த பரிதாபமான காட்சியை என்னால் என்றைக்குமே மறக்கமுடியாது.இத்தகைய சம்பவங்கள் என்றுமே எமது மனதை உறுத்திக்கொண்டே இருக்கின்றன"

"இன்று இந்தப் போர் ஓய்ந்து ஒரு அமைதிக்காலம் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது.இந்தக் காலத்தில் எமது சமுகக் கட்டுமானத்தை நாம் வளர்த்தெடுக்க வேண்டும்.நாம் போராளிகள் களத்தில் போராடி எமது மக்களைப் பாதுகாக்கும் பணியை எம்மால் செய்ய முடியும்.ஏனைய பணிகளை மக்களாகிய நீங்களே முன்னெடுக்கவேண்டும். ஜப்பான் போன்ற நாடுகள் சந்தித்த மிக மோசமான போர்களின் பின்னர் அவை மீளவும் தம்மைக் கட்டியெழுப்பியுள்ளன.இந்த முன்னுதாரணங்களை எமது மக்களும் பின்பற்றவேண்டும்"

"இன்று தோற்றுவிக்கப்பட்டுள்ள இந்த அமைதிச் சூழலின்மூலம் இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களும் தாம் விரும்பிய இடங்களுக்குச் சுதந்திரமாகச் சென்று வரமுடிகிறது. எல்லோரும் ஒருவரையொருவர் சந்தித்து உறவாட முடிகிறது.பிரிந்து தூரத்தில் இருக்கும்போது ஒருவரில் ஒருவர் சந்தேகமும்,முரண்பாடும் வளரும்.இவ்வாறு பக்கத்தில் நெருக்கமாக வந்து நாம் உறவாடும்போது எம்மிடையேயுள்ள வேற்றுமைகள் நீங்கி நாம் ஒற்றுமையாக வாழ முடியும்.இதற்காகவே நாம் இன்று எமது கலை,இலக்கிய,பண்பாட்டு பாரம்பரியங்களூடாகவும் இந்த நிகழ்ச்சியை நடாத்துகிறோம்"

"நாம் எமது மக்களின் சுதந்திரமான வாழ்வுக்காகவும் அவர்களுடைய உரிமைகளுக்காகவுமே போராடிவருகிறோம்.இதற்காக எந்தவழிகளிலும் போராடத் தயாராகவே நாம் இருக்கிறோம்.இன்று இந்தச் சமாதான வழிமூலம் எமக்கு அது கிடைக்கப்பெறாவிட்டால்,பலத்துடன் இருக்கும் எமது தமிழர் படை போராடி எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்பது தவிர்க்கமுடியாததாகிவிடும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் இசைஞான திலகம் உ.இராதாகிருஷ்ணனின் வயலின் இசை,இசைக்கலைமணி பிரியதர்ஷினி ஜெதீஸ்வரனின் பாடல் என்பவற்றுடன் திருமறைக் கலாமன்ற திருமலைக் கலைஞர்களின் "கூடித்துயர்வெல்" நாடகமும் இடம்பெற்றது.சிறப்பு நிகழ்ச்சியாக பிரபல சிங்கள நாடக நெறியாளர் தர்மஸ்ரீ பண்டார நாயகாவின் "ட்றோஜனத்துப் பெண்கள்" என்கின்ற யுத்தத்திற்கு எதிரான கிரேக்க நாடகமும் மேடையேற்றப்பட்டது.

திருமதி.ந.ஸ்ரீதேவி தலைமையில் இடம்பெற்ற உரையரங்கில்,கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திருமதி.அம்மன்கிளி முருகதாஸ் கருத்துரை வழங்கினார்.

# 200 ஓட்டங்களால் வெற்றி



டாக்காவில் நடைபெற்று வரும் 03 நாடுகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில், நேற்று முன்தினம் இந்திய அணி, பங்களாதேசை 200 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்துள்ளது.

277 எனும் வெற்றி இலக்குடன் ஆட ஆரம்பித்த பங்களாதேஷ் 27.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, 76 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

19 ஓட்டங்களில் 04 விக்கெட்டுக்களை ஷாயிர்கானும் அகக்கார் 19 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், ஷால்பி 13 ஓட்டங்களில் 03 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இந்தியா முன்னதாகத் துடுப்பெடுத்தாடி 49.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 276 ஓட்டங்களை எடுத்தது.இதில்யுவராஜ்சிங் ஆட்டமிழக்காது 102 ஓட்டங்களைப்பெற்றார்.

இதேவேளை, இத்தொடரின் இரண்டாவது போட்டி இன்று தென்னாபிரிக்க இந்திய அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளது.

உலகக் கிண்ணப் போட்டியில் இவ்விரு அணிகளும் ஒன்றை ஒன்று சந்திக்காத நிலையில் இப்போட்டி முக்கியத்துவம் பெறுவதுடன் தென்னாபிரிக்க அணிக்குப் புதிதாக தலைமையேற்றுள்ள கிரேம் சுமித்துக்கு முதலாவது போட்டியாகவும் அமைந்துள்ளது.

# ஒருவருடம் நீடிப்பு

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்றுநர் ஜோன் ரைட்டின் ஒப்பந்தக்காலம் மேலும் ஒரு வருடத்தினால் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த உலகக் கிண்ணப் போட்டிகளுடன் அவரது ஒப்பந்தக் காலம் முடிவடைந்தது. அதன்பின் தற்காலிகமாக இருமாத கால பதவி நீடிப்பு வழங்கப்பட்டது. எனினும் ஜோன் ரைட்டின் ஒப்பந்தத்தை மேலும் ஒரு வருடம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக இந்திய கிரிக்கெட் சபையின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

# தோல்வியை சரிப்படுத்த தொடரில் சிறப்புற ஆடுவோம்

**- தென்னாபிரிக்க அணித்தலைவர்**

உலகக் கிண்ணத் தொடரில் எங்கள் அணி அடைந்த தோல்வியை ஈடுகட்டும் விதத்தில் இந்த டாக்கா முத்தரப்பு தொடரில் சிறப்பாக ஆடி கிண்ணத்தைக் கைப்பற்றுவோம் என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் புதிய தலைவர் சூளுரைத்துள்ளார்.

அண்மையில் முடிந்த உலகக் கிண்ணத் தொடரில் எங்கள் அணி இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெறவில்லை. அதனால் நாங்கள் கடுமையாக விமர்சிக்கப்பட்டோம். அந்தத் தோல்வியை ஈடுகட்டும் அளவுக்கு இத்தொடரில் சிறப்பாக ஆடுவோம். எங்கள் அணிவீரர்கள் அனைவரும் வெற்றிக்காக பசியோடு காத்துக் கொண்டிருக்கின்றனர். எங்கள் வீரர்களின் உண்மையான திறமை இத்தொடரில் வெளிப்படும். இது எங்களுக்குக் கிடைத்த அரிய வாய்ப்பாகவே நாங்கள் கருதுகின்றோம். இந்த வாய்ப்பை தவறவிடமாட்டோம் என்றார்.

எனவே சாம்பியன் கிண்ணத்தையும் நாங்களே கைப்பற்றுவோம் என்றார் ஸ்மித்.

# நக்கீரன் பத்திரிகை ஆசிரியர் சிறப்பு புலனாய்வுத்துறையால் கைது

(சென்னை)

நக்கீரன் பத்திரிகையின் ஆசிரியர் ஆர். கோபால் நேற்று முன்தினம் இரவு சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் இம்மாதம் 25 ஆம் திகதி வரை நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

காவல் துறைக்கு உளவு பார்க்கச் சென்ற ஒருவரை வீரப்பன் கொலை செய்ததற்கு உடந்தையாக இருந்தது, உரிமம் இல்லாமல் கைத்துப்பாக்கி வைத் திருத்தது ஆகிய குற்றங்களுக்காக நக்கீரன் கோபால் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

காவல்துறைக்கு தகவல் அளித்துவந்த ராஜாமணி என்பவரை நக்கீரன் கோபால் கொடுத்த தகவலின் அடிப்படையில் 1998 ஆம் ஆண்டு வீரப்பன் கொலை செய் தது சம்பந்தமாக நக்கீரன் ஆசி ரியர் மீது குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

மேலும் நேற்று முன்தினம் இரவு சிறப்பு புலனாய்வு பிரிவினர் நக்கீரன் கோபாலை கைதுசெய்து சோதனையிட்ட போது அவரிடம் இருந்து உரிமம் இல்லாத கைத்துப்பாக்கியும், ரவைகளும், தடைசெய்யப்பட்ட தமிழ்நாடு விடுதலைப் படையின் பிரசுரங் களும் கைப்பற்றப் பட்டதாக குற்றப்புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

நக்கீரன் கோபால் தற்போது சென்னை மத்தியசிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

# வட-கிழக்கு பகுதிகளுக்கு 'நிக்கோட்' 16 அம்புலன்ஸ்களை வழங்கியது

வட-கிழக்கு மாகாணங்களின் சுகாதார சேவையை மேம்படுத்தும் முகமாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் 'நிக்கொட்' நிறுவனம் நேற்று 16 அம்புலன்ஸ் வண்டிகளை கையளித்துள்ளது. மாகாண சுகாதார அமைச்சிடம் இவ்வண்டிகள் கையளிக்கப்பட்டுள்ளன. இந் நிகழ்வு திருகோணமலையில்



நடைபெற்றது.

'நிக்கொட்' திட்டப்பணிப்பாளர் ரி.லங்காநேசன் இவற்றுக்கான பத்திரங்களைக் கையளித்தார்.

அம்பாறை, மன்னார் மாவட்டங்களுக்கு தலா நான்கு வண்டிகளும், வவுனியா மாவட்டத்திற்கு மூன்று வண்டிகளும், மட்டக்களப்பு மாவட்டத்துக்கு இரண்டு வண்டிகளும் , திருகோணமலை, யாழ்ப்பாணம்,கிளிநொச்சி மாவட்டங்களுக்கு தலா ஒன்றும் வழங்கப்பட வுள்ளதாக மாகாண சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

# சதாம் ஆதரவாளர்களுக்கு அடைக்கலம் கொடுக்க வேண்டாம்!

## சிரியாவிற்கு அமெ.எச்சரிக்கை

(வாஷிங்டன்)

தப்பியோடும் சதாமின் ஆதரவாளர்களுக்கு அடைக்கலம் கொடுக்க வேண்டாம் என்று சிரியாவை அமெரிக்கா எச்சரித்துள்ளது.

சதாம் ஆட்சியில் இல்லை என்றும் ஈராக்கிய யுத்தத்தில் காய மடைந்த அமெரிக்க வீரர்கள் மத்தி யில் உரையாற்றுகையில் அமெரிக்க அதிபர் புஷ் கூறியுள்ளார்.

அதேநேரம் போர் இன்னும் முடிந்துவிட்டதா? சதாம் என்ன ஆனார்? என்பன தமக்கு இன்னமும் சொல்லமுடியாத விடயங்கள் என்றும், ஆனால், பாக்தாத்தில் சதாம் ஆட்சியிலில்லை என்பது மட்டும் உறுதி என்றும் கூறியுள்ளார்.

3 வாரங்களாக இடம்பெற்ற போரில் 107 வீரர்கள் கொல்லப் பட்டதுடன், 399 வீரர்கள் காய மடைந்துள்ளதுடன் 11 பேரைக் காணவில்லை என அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சிரியா ஈராக்கின் பேரழிவைத்தரும் ஆயுதங்களை மறைத்துவைத்திருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அந்நாட்டின் மீது இராணுவநடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் என சதாம் ஹுசைனைப் பதவி கவிழ்ப்பதற்கான அமெரிக்க நடவடிக்கைக்கு முக்கிய வழிகாட்டியாக யிருந்த பென்டகன் ஆலோசகர் ரிச்சட்பேல் தெரிவித்துள்ளார்.

# குடும்பஸ்தர் தற்கொலை!

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பகுதியில் குடும்பத் தலைவர் ஒருவர் நேற்று மாலை ஆறு மணியளவில் மரத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

வட்டக்கச்சி சுவிற்சென்ரர் வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான மருததேரர் அருளம்பலம் (வயது - 45) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார். (12)

# ஜே. வி. பி. க்கு வழங்கிய சந்தர்ப்பத்தை புலிகளுக்கு ஏன் வழங்கக்கூடாது!

## சிறிலங்காப் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க

இலங்கையில் இரண்டுமுறை ஆயுதக்கிளர்ச்சியில் ஈடுபட்ட மக்கள் விடுதலை முன்னணி ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்ளமுடியும் என்றால், விடுதலைப்புலிகளுக்கு ஏன் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கக்கூடாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார். வைபவம் ஒன்றில் கலந்துரையாடியபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஆயுதக்கிளர்ச்சி ஏற்பட்டு பின்னர் சமாதானம் நிலவிய வரலாறுகளை அறிந்துகொண்டு அந்த அனுபவத்தின் மூலமே சமாதான முன்னெடுப்புக்களை இங்கு மேற்கொண்டு வருவதாக கூறியுள்ளார். ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்ட மக்கள் விடுதலை முன்னணிக்கு அரசியலில் பங்கு கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இன்று பாராளுமன்றத்திலும், மாகாண சபைகளிலும் அவர்களை அங்கத்தவர்களாகக் காணக்கூடியதாகவுள்ளது. இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை புலிகளுக்கு வழங்கவேண்டும் என்பதற்காகவே யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இதன் மூலம் கடந்த ஒரு வருடத்தில் அப்பாவி இளைஞர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

### டோக்கியோ...

மைப்படுத்த சிறிலங்கா முடிவு செய்திருக்கின்றது என விடுதலைப்புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் பொருளாதார மற்றும் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரையாடும் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் புறக்கணிக்கப்பட்டிருப்பது பரஸ்பர நம்பிக்கையை இழக்கச் செய்யும் செயலாகும்.

பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்யாதுவிட்டதுடன் முக்கியமான இந்த முன்னோடி உதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப்புலிகளின் பங்கேற்பை சிறிலங்கா அரசும் அனுசரணையாளராகச் செயலாற்றும் நோர்வே அரசும் உறுதிப்படுத்தாமையும் அதிருப்தி அளித்திருக்கின்றது.

மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, இடம்பெயர்ந்த மக்கள் ஆகிய விவகாரங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளும், சிறிலங்கா அரசும் இணைந்து செயலாற்ற முடிவு செய்திருந்தமை முதற்கட்டப் பேச்சுவார்த்தையில் பாராட்டப்பட்டதுடன் இது இருதரப்பினருக்கும் இடையிலான பரஸ்பர நம்பிக்கையை வளர்ப்பதாக உணரப்பட்டது.

வாஷிங்டன் மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்கேற்பது தவிர்க்கப்பட்டமை சிறிலங்கா அரசின் நோக்கம் மற்றும் அதன் மீதான நம்பிக்கையை விடுதலைப் புலிகள் இழக்கச் செய்திருக்கின்றது.தமிழ் மக்களின் வீடுகள், பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள் ஆகிய இடங்களில் படையினர் தொடர்ந்து ஆக்கிரமித்திருப்பது 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் அதன் பின்னர் நடைபெற்ற பல்வேறு சுற்று பேச்சுவார்த்தைகளில் எட்டப்பட்ட உடன்பாடுகளையும் சிறிலங்காப் படையினர் மீறி வருவதை எடுத்துக் காட்டுகின்றது.

சமாதானத்துக்கு எதிரான சிறிலங்காப் படையினரின் போக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசின் இயலாமையையும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வுத் திட்டங்களை செயற்படுத்த முடியாத நிலைக்கு தள்ளியிருக்கின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட விடயங்கள் இதுவரை செயற்படுத்தப்படாமை சமாதான முயற்சிகளை கேள்விக்குறியாக்கி இருப்பதுடன் தமிழ் மக்களின் நம்பிக்கையையும் அது பலவீனப் படுத்தியிருக்கின்றது.

இலங்கை முழுவதும் போரினால் பாதிக்கப்பட்டிருந்தாலும் வடக்கு - கிழக்குப் பகுதியே அதிகம் பாதிப்புக்குள்ளாகி அபிவிருத்தி அடையாதிருக்கின்றது. எனவே அப்பகுதிகளுக்கு சர்வதேச உதவிகள் அதிகமாக தேவைப்படுகின்றது.

தமிழ் மக்களின் உடமைகளை சிறிலங்காப் படையினர் தொடர்ந்தும் அபகரித்திருப்பதுடன், வடக்கு - கிழக்கில் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு செயற்பாடுகளை ஆரம்பிப்பதில் ஏற்றுக் கொள்ள முடியாத தாமதம் அடைந்து வருகின்றது.

இந்தச் சூழ்நிலையில் தமிழ் மக்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் தமிழ்மக்களின் அபிலாசைகளையும், தேவைகளையும் எடுத்துரைக்கும் வகையில் முக்கியத்துவம் வாய்ந்த வாஷிங்டன் முன்னோடி மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

மீண்டும் பரஸ்பர நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் உருவாக்கும்வகையில் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஏற்படுத்தப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்திலும் இதுவரை நடைபெற்ற ஆறுசுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இயல்பு நிலையை தோற்றுவிக்க நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டும்.

குறிப்பாக அகதிகள் மீள்குடியேற்றம் உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தல் போன்ற நடவடிக்கைகளை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும் எனவும் தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்திருக் கும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### தென்னாபிரிக்கா...

பட வேண்டியதன் அவசியத்தை பெரும்பான்மையின மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள்.

அதிகாரங்களைப் பரவலாக்குவதன் மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணலாம் என்பதையும் பெரும்பான்மை இனத்தவர் ஏற்றுக்கொண்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### புலிகள்...

ளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ ஆகியோர் தலைமையிலான குழுவினரே இக்கூட்டத்தில் கலந்துகொள்வர்.

இதேவேளை இருதரப்பினரது நடமாட்டங்கள் குறித்த கூட்டம் ஒன்று மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலகத்தில் 20ஆம் திகதியும், திருகோணமலை மாவட்டத்தில் 21 ஆம் திகதியும் நடைபெறவிருக்கின்றன.

### சமாதான...

னெடுத்து வருகின்றார்.என்று அவர் கூறியுள்ளார்.

இலங்கையின் சமாதானத்தில் நோர்வே அரசாங்கம் ஏன் மத்தியஸ்தம் வழங்கவேண்டும் என்று சிலர் வினாவுகின்றனர் இதற்கு பதிலளித்த ஒவ்பார்லி நோர்வேயில் அரசியல் ஸ்திரத்தன்மை நிலவி வருவதால் ஏனைய நாடுகளில் ஏற்படும் அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண உதவுவது தமது நாட்டின் கொள்கை, என்று கூறியுள்ளார்.

இலங்கையில் சமாதானம் நிலைநாட்டப்படுவதன் மூலம் உலக அரசியல் நிலையை ஸ்திரப்படுத்துவதுடன், பொருளாதார அபிவிருத்தி என்பதுடன் மனித உரிமைகளையும் நிலை நாட்ட முடியும் என நோர்வே அரசு நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

# விபத்தில் பலி!

(சென்னை)

தமிழகம் விழுப்புரத்தில் இடம் பெற்ற வாகன விபத்தில் இலங்கைத் தமிழர்கள் நான்கு பேர் பலியாகியுள்ளனர்.

வான் ஒன்றும் பாரவூர்தி ஒன்றும் நேற்று நேருக்குநேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

### 30,000 கோடி...

ளார். ஆளுநர் ஜெயவர்த்தன வாஷிங்டனில் செய்தியாளர்கள் மத்தியில் பேசியபோதே இதனைத் தெரிவித்துள்ளார். டோக்கியோ மாநாட்டிற்கு முன்னோடியாக அமெரிக்கத் தலைநகரில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் மாநாட்டில் கலந்துகொள்ளவதற்கு ஆளுநர் அங்கு சென்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

அச்சகங்களுக்கு அலுவலகங்களுக்கு மாணவர்களுக்கு
புத்தாண்டு தினத்தில் இதே இடத்தில்
ஒரு நல்ல சேதி !...

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.